**08.09.2023**

**STC No. 13 /2022**
**ம.சா.1 ராஜன் த/பெ ராமசந்திரன்**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள், உறவினர்கள் அல்ல. நான் பகளவாடி, எதிரி தவிட்டுப்பட்டி. 20.12.2021 அன்று 1,30,000/-ம் பணத்தை அன்னை மருத்துவமனை எதிரில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் வைத்து கொடுத்தேன். அப்போது அருகில் யாரும் இல்லை. பணம் கொடுத்ததற்கு ஆதரவாக எதீரி அப்போதே வழக்கு காசோலையை கொடுத்தார். எனக்கு துறையூர் யூனியன் பேங், துறையூர் ஸ்டேட் பேங், துறையூர் மெர்க்கண்டைல், சிட்டி யூனியன் வங்கி துறையூர் மற்றும் HDFC, Thuraiyur ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. நான் RTO office consultent ஆக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வங்களில் வரவு செலவு செய்துவருகிறேன். என்னிடம் வாங்கிய தொகையில் எதுவும் எதிரி கொடுக்கவில்லை. மேற்படி தொகையை கைமாற்று கடனாக கொடுத்தேன். வட்டிக்கு கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் கொடுத்த வழக்கு காசோலை KVB Bank, கண்ணனுார் கிளைக்குண்டானது. எதிரிக்கு வேறு வங்கியில் வரவு செலவு உள்ள விவரம் தெரியாது. துறையூர் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ்வங்கி ஆகிய வங்கிகளில் எதிரிக்கு கணக்கு உள்ள விவரம் தெரியாது.

2. என்னுடைய சிட்டி யூனியன் வங்கி கணக்கு எண் 201001000600542 ஆகும். மேற்படி வங்கி கணக்கில் பணம் வந்தால் என்னுடைய தொலைபேசி எண்ணுக்கு தகவல் வரும். மேற்படி காசோலை தொகை தவிர வேறு எந்த தொகையும் எதிரிக்கு நான் கொடுக்கவில்லை. எனக்கும் எதிரிக்கும் 2020 ஆண்டிலிருந்து வரவு செலவு கணக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். காசோலை கொடுத்த தேதிக்கு பின்பு எந்த வரவு செலவும் எங்களுக்குள் இல்லை. எதிரி என்னிடம் கடன் வாங்கி அதை திருப்பி கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார் என்றால் காசோலை தேதிக்கு முன்பு இருவருக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது. RTO அலுவலகம் தொடர்பாக பெயர் மாற்றம் செய்வதற்கு எதிரி எனக்கு பணம் கொடுப்பது வழக்கம். அதற்கு ரசீது கொடுப்பது இல்லை. பொதுவாக அரசு அலுவலகங்களில் செலுத்தப்படும் தொகைகளுக்கு ரசீது கொடுப்பது வழக்கம் என்றால் ரசீது கொடுப்பது வழக்கமில்லை. எதிரி எத்தனை பெயர் மாற்றத்திற்கு என்னிடம் தொகை கொடுத்தார் என்றால் அதை தொடர்புடைய ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

3. இருசக்கர வாகனம் மற்றும் டாடா ஏசி வாகனத்திற்கு பெயர் மாற்றம் செய்ய 1000 ரூபாயும், National permit வாகனத்திற்கு 20,000/-ம் வாங்கப்படும். 2,500/- ரூபாய் எந்த வாகனத்திற்கு வாங்கப்படுவது இல்லை என்றால் வாகனத்திற்கு பைனான்ஸ் கொடுத்த நபரின் பெயரை RC புக்கில் ஏற்றுவதற்காக 2,500/- வாங்குவோம். மேற்படி RC புக்கில் பெயர் ஏற்றுவதற்கு ரசீது வழங்குவது இல்லை. மேற்படி பணம் வாங்கப்படுவதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் இல்லை. 2020 ம் ஆண்டிலிருந்து இது நாள் வரைக்கும் உள்ள என்னுடைய சிட்டி யூனியன் வங்கி கணக்கின் Statement தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

உண்மை நகல்

ஒம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர்,
துறையூர்.